**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**இ.ம.எண்.04/2019**
**அ.வ.எண்.49/2010**

1. செங்கோட கவுண்டர்
2. ராமசாமி (இறந்துவிட்டார்)
3. ராமாயி ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. ராமசாமி
2. கே.ஆர்.மணி
3. சின்னப்பகவுண்டர் (இறந்துவிட்டார்)
4. ராமசாமி (இறந்துவிட்டார்)
5. புண்ணியமூர்த்தி
6. தேவராஜன்
7. பழனியம்மாள்
8. ராஜாத்திமணி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9. வீரம்மாள்
10. ரதி
11. தனம் (எ) தனலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 27.11.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 1, மற்றும் 3 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 2 மற்றும் 8 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 9 முதல் 11 ம் எதிர்மனுதாரர்கள்/ உத்தேசதரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.ஸ்டாலின் ராஜா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு காலவரையறைச் சட்டம் பிரிவு 5ன் கீழ் இறந்துபோன 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளை இவ்வழக்கில் உரிய நேரத்தில் சேர்க்காததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட கோரி

மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : -

வழக்கின் 3 ம் எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதியான சின்னப்பகவுண்டர் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாக 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. அதன்பின்பு 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதி தரப்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞரும் 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதியின் இறப்பு பற்றிய சங்கதியை தெரிவிக்காமல் அவரது வக்காலத்தினை வாபஸ் பெற்றுக்கொண்டார். அதன்பின் 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதி இவ்வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார். இவ்வழக்கில் ஏற்கனவே 4 ம்பிரதிவாதியின் மகன் புண்ணியமூர்த்தி 5 ம்எதிர்மனுதாரர்/5 ம்பிரதிவாதியாக உள்ளார். மேற்படி வாதிகள் இறந்து போன 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரின் சட்டபூர்வமான வாரிசுகள் விவரம் பற்றி 19.08.2019 மற்றும் 27.08.2019 ம் தேதிகளில் 2,8 பிரதிவாதிகளின் குறிப்பாணைகளின் பேரிலேயே தெரிந்து கொண்டார்கள். அதன் பின்பு மேற்படியாரின் இதர வாரிசுகள் பற்றிய விவரத்தினை அறிந்துகொள்ள காலதாமதம் ஏற்பட்டுவிட்டதால் இறந்துபோன 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்திட உரிய காலத்தில் மனு செய்துகொள்ள முடியாமல் 1987 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதை மன்னித்து இம்மனுவினை ஏற்று உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8 ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி கடந்த 6 மாதம் முன்பு இறந்து விட்டார். விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள வாதிகள் எதிர்மனுதாரர்களின் நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் அவர் இறப்பை அறிவித்து நடவடிக்கை எடுக்காமல் ஆணையாளர் நியமனம், அவசர கதியில் விசாரணை போன்றவைகளை செய்துவந்து, குறுக்கு விசாரணை சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2019 ல் 3 ம்எதிர்மனுதாரர் இறந்த சங்கதியும் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பு பெறும் எண்ணத்தில் கடந்த 6 மாத காலம் காலதாமதம் செய்துவிட்டு, தற்போது எதிர்மனுதாரர்கள் குறிப்பாணையில் இருந்துதான் தெரியும் என்று பொய்யுரைத்துள்ளார்கள். கடந்த 6 மாதங்களாக வாரிசு நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும், மேற்படி காலதாமதத்தை மன்னித்து ஏற்க சரியான காரணம்

சொல்லாத காரணத்தினாலும் இம்மனு செல்லத்தக்கதல்ல. மேலும் மனுதாரர்களின் 3,4,7 பத்திகளில் கண்ட சங்கதிகள் தவறாகும். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 மற்றும் 8 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) 10 ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டு 9 மற்றும் 11 ம் எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 4 ம்பிரதிவாதி ராமசாமி என்பவர் 12.03.2019 ம் தேதி இறந்தவிவரம் மனுதாரர்கள் நன்கு தெரியும். ஆனால் 4 ம்பிரதிவாதி இறந்தது 2 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்ட போதுதான் மனுதாரர்களுக்கு தெரியும் என்று பொய்யுரைத்துரைத்துள்ளார்கள். மேற்படி அசல் வழக்கில் 3,4 ம்பிரதிவாதிகள் இறந்த விவரங்களை நன்கு தெரிந்துகொண்டே அவர்களின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்தால் மேற்படி வழக்கானது வலுவிழந்து போய்விடும் என்ற காரணத்தினால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் மறைத்து அசல் வழக்கினை நடத்தி வந்தது சட்டத்திற்கு புறம்பான செயலாகும். மேலும் இறந்துபோன 3,4 பிரதிவாதிகளின் இறப்பு விவரங்களை நன்கு தெரிந்துகொண்டு தற்போது இறந்தவர்களின் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி காலதாமத மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்கள் முற்றிலும் தவறானதாகும். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 9 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் கூறுகிறார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

5) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வழக்கின் 3 ம் எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதியான

சின்னப்பகவுண்டர் சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாக 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது எனவும், அதன்பின்பு 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதி தரப்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞரும் 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதியின் இறப்பு பற்றிய சங்கதியை தெரிவிக்காமல் அவரது வக்காலத்தினை வாபஸ் பெற்றுக்கொண்டார் எனவும், அதன்பின் 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதி இவ்வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார் எனவும், இவ்வழக்கில் ஏற்கனவே 4 ம்பிரதிவாதியின் மகன் புண்ணியமூர்த்தி 5 ம்எதிர்மனுதாரர்/5 ம்பிரதிவாதியாக உள்ளார் எனவும், மேற்படி வாதிகள் இறந்து போன 3 ம்எதிர்மனுதாரர்/3 ம்பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரின் சட்டபூர்வமான வாரிசுகள் விவரம் பற்றி 19.08.2019 மற்றும் 27.08.2019 ம் தேதிகளில் 2,8 பிரதிவாதிகளின் குறிப்பாணைகளின் பேரிலேயே தெரிந்து கொண்டார்கள் எனவும், அதன் பின்பு மேற்படியாரின் இதர வாரிசுகள் பற்றிய விவரத்தினை அறிந்துகொள்ள காலதாமதம் ஏற்பட்டுவிட்டதால் இறந்துபோன 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்திட உரிய காலத்தில் மனு செய்துகொள்ள முடியாமல் 1987 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதை மன்னித்து இம்மனுவினை ஏற்று உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 2,8 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி கடந்த 6 மாதம் முன்பு இறந்து விட்டார் எனவும், விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள வாதிகள் எதிர்மனுதாரர்களின் நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் அவர் இறப்பை அறிவித்து நடவடிக்கை எடுக்காமல் ஆணையாளர் நியமனம், அவசர கதியில் விசாரணை போன்றவைகளை செய்துவந்து, குறுக்கு விசாரணை சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் 2019 ல் 3 ம்எதிர்மனுதாரர் இறந்த சங்கதியும் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் எனவும், இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பு பெறும் எண்ணத்தில் கடந்த 6 மாத காலம் காலதாமதம் செய்துவிட்டு, தற்போது எதிர்மனுதாரர்கள் குறிப்பாணையில் இருந்துதான் தெரியும் என்று பொய்யுரைத்துள்ளார்கள் எனவும், கடந்த 6 மாதங்களாக வாரிசு நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும், மேற்படி காலதாமதத்தை மன்னித்து ஏற்க சரியான காரணம் சொல்லாத காரணத்தினாலும் இம்மனு செல்லத்தக்கதல்ல எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 மற்றும் 8 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

(iii) 9 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் தரப்பில்

4 ம்பிரதிவாதி ராமசாமி என்பவர் 12.03.2019 ம் தேதி இறந்தவிவரம் மனுதாரர்கள் நன்கு தெரியும் எனவும், ஆனால் 4 ம்பிரதிவாதி இறந்தது 2 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்ட போதுதான் மனுதாரர்களுக்கு தெரியும் என்று பொய்யுரைத்துரைத்துள்ளார்கள் எனவும், மேற்படி அசல் வழக்கில் 3,4 ம்பிரதிவாதிகள் இறந்த விவரங்களை நன்கு தெரிந்துகொண்டே அவர்களின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்தால் மேற்படி வழக்கானது வலுவிழந்து போய்விடும் என்ற காரணத்தினால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் மறைத்து அசல் வழக்கினை நடத்தி வந்தது சட்டத்திற்கு புறம்பான செயலாகும் எனவும், மேலும் இறந்துபோன 3,4 பிரதிவாதிகளின் இறப்பு விவரங்களை நன்கு தெரிந்துகொண்டு தற்போது இறந்தவர்களின் வாரிசுகளை சேர்க்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் எனவும், மேற்படி காலதாமத மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்கள் முற்றிலும் தவறு எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 9 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) மனுவானது 3 ம்பிரதிவாதி இறந்தது குறித்து தாக்கல் செய்துள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் 4 ம்பிரதிவாதி குறித்து எதிருரைகள் தாக்கல் செய்துள்ளதால் அவைகள் ஏற்புடையதல்ல.

(v) இந்நிலையில் வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் 3 ம்பிரதிவாதி 30.10.2013 ல் உத்தேச தரப்பினர்களையும், 5 ம்பிரதிவாதியையும் வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்பதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்காமல் ஒப்புக் கொண்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் இறந்துபோன 3 ம்பிரதிவாதியின் வாரிசுகளில் ஒருவரான 5 ம்பிரதிவாதி இவ்வழக்கில் ஏற்கனவே தரப்பினராக உள்ளது தெரியவருவதால் வழக்கு அற்றுப்போகாது என கீழ்கண்ட முன்தீர்ப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

AIR 1983 SC 355

In the estate has got sufficient represent and even if one of the legal representatives of the deceased is on records “Suit or Appeal” will not abate.

எனவே இவ்வழக்கில் இறந்துபோன 3 ம்பிரதிவாதியின் மகன் 5 ம்பிரதிவாதியாக

இவ்வழக்கில் உள்ளதால் வழக்கு அற்றுப்போகாது என்பதால் அற்றுப்போனதை ரத்து செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்ற கேள்வியே எழவில்லை என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**